

# "ஓம் சாயி ராம்"

# விரோதி புதுவருஷ விடயம்

"ஜனனி ஜன்ம ஸௌக்யானாம் வர்த்தனீ குல ஸம்பதாம்
பதவீ பூர்வ புண்ணியானாம் லிக்யதே ஜன்ம பத்ரீகா"





க.ரவீந்திரன்
86, விபுலாநந்த வீதி
காரைதீவு - 01
தொலைபேசி : 060-2670251

# திருக்கணிதப் பஞ்சாங்கப்படி
# விரோதி வருஷப்பிறப்புக் கருமம்

சர்வதாரி வருஷம் பங்குனி மாதம் 31ந் திகதி (13-04-2009) திங்கட்கிழமை இரவு உதயாதி நாழிகை 46-51 நடுஇரவு மணி 12-47 இல் **விரோதி** என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் கேட்டை 1-ம் பாதம், திதி. அபரபட்ச பஞ்சமி. சித்தயோகம். இது 60 வருட சுற்று வட்டத்தில் 23 ஆவது வருஷமாகும். அன்று இரவு (நாழிகை 36-51) மணி 8-47 தொடக்கம் பின்னிரவு (நாழிகை 56-51) மணி 04-47 வரையும் மேட சங்கிரமண புண்ணியகாலம் ஆகும். வருஷம் பிறக்கும்போது உதயலக்கினம் □மகரம்□ ஆக அமைகின்றது.

இப்புண்ணியகாலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து, தலையில் விளாவிலையும், காலில் கடம்பமிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து, வெண்நிறப் பட்டாயினும் வெள்ளை புது வஸ்திரமாயினுந் தரித்து முத்து சேர்த்திழைக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, விநாயகர் முதலிய இஷ்ட குல தேவாராதன தரிசனங்கள் செய்து, குரு, பெற்றோர், பெரியோர்களை வணங்கி, நெல்லிக்காய்த் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து, புதுப்பஞ்சாங்க பலன்களைக்கேட்டுச் சயனிப்பார்களாக.

மறுநாளாகிய செவ்வாய்க்கிழமை அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து, நித்திய கருமங்களை முடித்து, கண்ணாடி, தீபம், பூரணகும்பம், முதலான மங்கலப் பொருட்களைத் தரிசித்து முன்போல் ஸ்நானஞ்செய்து புதுவருட சூரியனுக்குப் பொங்கல், பூசை வழிபாடுகள் செய்து, விருந்தினர்களுடன் முன்போல் போஜனம் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து, புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து, மங்களகரமாக வாழ்வார்களாக.

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள் : அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால், ஆயிலியம், விசாகம் 4-ம் கால், அனுசம், கேட்டை, ரேவதி.

மருத்துநீர் : தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் பற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடில் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

| | |
|---|---|
| புதுவருடப்பிறப்பு | : 13-04-2009 திங்கட்கிழமை |
| நேரம் | : நள்ளிரவு 12.47 மணி |
| புண்ணியகாலம் | : திங்கள் இரவு 8.47 முதல் செவ்வாய் அதிகாலை 4.47 வரை |
| பொங்கல் | : செவ்வாய் காலை சூரியனுக்குப் பொங்கல் |
| நீராடல் | : புண்ணிய காலத்தில் |
| கைவிசேடம் | : 15-04-2009 புதன் அதிகாலை 5.00 முதல் 6.02 வரை |
| | : 16-04-2009 வியாழன் அதிகாலை 6.01 முதல் 7.13 வரை |

## வாக்கிய பஞ்சாங்கப்படி
## விரோதி வருஷப்பிறப்புக் கருமம்

கலியுகாதி சுத்ததினம் 1866469, நாடி 42 விநாடி 36, தற்பரை 15க்குச் சரியான சர்வதாரி ☐ பங்குனி 31 (13-04-2009) திங்கட்கிழமை முன்னிரவு நாடி 42 விநாடி 36 (மணி **11-07**) அபரபக்க சதுர்த்தித் திதியில், கேட்டை நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் வரியான் நாம யோகத்தில், பாலவக்கரணத்தில், தனு லக்கினத்தில், மிதுன நவாம்சத்தில், செவ்வாய் காலவோரையில் செவ்வாய் சூக்குமவோரையில், தாமத குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய கோழி நடைத்தொழிலும் சூக்கும பீ அரசுத் தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புதிய விரோதி வருஷம் பிறக்கின்றது. அன்று முன்னிரவு நாடி 32 விநாடி 36 (மணி 07-07) முதல் அன்று பின்னிரவு நாடி 52 விநாடி 36 (மணி 03-07) வரை விஷுபுண்ணிய காலமாகும்.

இப்புண்ணியகாலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து, சிரசில் இலவமிலையும் காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெண்ணிறம் கறுப்புக்கரைஅமைந்த பட்டாடையாயினும் தரித்து முத்து நீலம் இழைத்த ஆபரணமணிந்து வழிபாடு செய்க.

புதுவருடப்பிறப்பு : 13-04-2009 திங்கட்கிழமை
நேரம் : இரவு 11.07 மணி
புண்ணியகாலம் : திங்கள் இரவு 7.07 முதல் செவ்வாய் அதிகாலை 4.47 வரை
புதுவருட பொங்கல் : செவ்வாய் அதிகாலை சூரியனுக்குப் பொங்கல்

## சர்வதாரி கிரகணங்கள்

☐ 22-07-2009 புதன்கிழமை காலை சூரிய கிரகணம் இலங்கையில் பார்சுவ கிரகணமாகத் தோன்றும். அதிகாலை 05-31 முதல் காலை 07-15 வரை
தோஷ நட்சத்திரங்கள் :- புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம், அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம், உத்தரட்டாதி.

☐ 31-12-2009 வியாழக்கிழமை இரவு பார்சுவ சந்திர கிரகணம். இலங்கையில் தோற்றும். வியாழன் நள்ளிரவு 01-45 முதல் வெள்ளி அதிகாலை 04-15 வரை.
தோஷ நட்சத்திரங்கள் :- மிருகசீரிடம் - 3ம், 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், சுவாதி, விசாகம், 4ம் பாதம், அனுசம், கேட்டை, சதயம்.

- 15-01-2010 வெள்ளிக்கிழமை பகல் சூரிய கிரகணம். வவுனியா வடக்கே கங்கண சூரிய கிரகணம், காலை 11-18 முதல் மாலை 03-11 வரை. வவுனியா தெற்கே பார்சுவ சூரிய கிரகணம் காலை 11-12 முதல் 03-07 வரை.
- 

தோஷ நட்சத்திரங்கள் :- கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1ம்,2ம்,3ம் பாதங்கள், உத்தரம், மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம் 1ம்,2ம், பாதங்கள்.

## மேடராசி

(அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)

உலக நடப்புக்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் நிறைந்த மேட ராசி அன்பர்களே! இவ்வருடம் 2009-05-01 அன்று குருபகவான் 11ம் வீட்டிற்கு வருவதால் பொதுவாக முன்பிருந்த கஷ்டங்கள் நீங்கி நற்பலன்களைக் காட்டக்கூடியதாக இருக்கும். லாபத் தானமாக இருப்பதால் கஷ்டங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். தொட்டதெல்லாம் பொன்னாகும். பொருளாதாரம் மேலோங்கும். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். இனசன ஒற்றுமை ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் கிட்டும். வேலைப்பளு குறைவடையும். அதிகாரிகள், சக ஊழியர்கள், ஒத்துழைப்புக் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல லாபத்தைத் தரும். பழைய நிலுவைகளும் வந்து சேரும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு கருமங்கள் கைகூடும். மாணவர்களுக்கு கல்வி நன்றாக அமையும். பரீட்சைகளில் சித்தி கிட்டும். கல்வியால் புகழும் பாராட்டும் கிட்டும். 2009-07-30 இல் மீண்டும் குரு பகவான் 10 இற்கு வருவதால் 2009-05-01க்கு முன்பிருந்த நிலை ஏற்பட்டு 2009-12-19க்குப் பின் மீண்டும் பலன் தொடரும்.

வருட ஆரம்பத்தில் சனி 5இல் நிற்பது நல்லது. 2009-09-09இல் சனி 6ம் வீட்டுக்கு வருவதால் மேலும் நற்பலன்கள் அதிகரிக்கும் ஆனாலும் தேகசுகம் பாதிக்கப்படும். பெரும்பாலும் வாய்வுபிடிப்பு, வாதம், கை கால் எலும்பு முறிவு, நூடம், நரம்புத் தளர்ச்சி என்பன துன்பம் தரலாம்.

# இடபராசி

(கார்த்திகை 2,3,4ம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்)

நடை உடை பாவனையில் தனித்துவத்துடன் செயற்பட்டு பிறரை வசீகரிக்கும் இடபராசி அன்பர்களே! 2009-05-01இல் குருபகவான் 10ம் இடத்தில் மாறுவதால் நற்பலன்கள் குறைவடையும். தொழில் தாபனங்களில் முறுகல் நிலை ஏற்படும். இடமாற்றமும் ஏற்படலாம். உயர்ச்சிகள் தடைப்படும். உயர்ச்சிகளில் கூடிய கவனம் தேவை. வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடையாது போகும். பத்தில் வியாழன் பதியை விட்டுக் கிளப்பும் என்ற முதுமொழிக்கேற்ப குடும்பத்தில் சிறப்புக்கள் குறைந்து காணப்படும். பொருளாதாரம் பின்னடைவைக் காட்டும். குடும்ப நிலை பதிக்கப்படும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தமாகக் காணப்படும். கல்வியில் தடைகள் ஏற்படலாம். கல்வியில் ஊக்கம் தேவை. வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தமடையும். முதலீடுகளில் பிரச்சினைகள் ஏற்படும். லாபம் குறையும். திருமணங்கள் தடைப்படும். திசாபுத்தி சாதகமானால் கைகூடும். சனி பகவான் 4ல் நிற்பதும் 2009-09-09இல் 5ல் நிற்பதும் எவ்வித மாற்றத்தையும் தராது. ஆனாலும் சனிபகவான் யோககாரனாக இருப்பதால் பொருளாதாரம் சிறப்படையும். குடும்பநிலை உயர்ச்சியடையும். குடும்பசுகம் நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கு ஓரளவு நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு ஓரளவு நன்மை உண்டானாலும் கல்வியில் ஊக்கம் தேவை.

2009-07-30இல் குருபகவான் மீண்டும் 9ம் இடத்தில் மாறுவதால் குரு மாற்றத்தால் ஏற்பட்ட கஸ்டங்கள் குறைவடையும். நன்மைகள் உண்டாகும். 2009-12-19இல் மீண்டும் 10இற்கு மாறுவதால் 2009-05-01இல் கூறியது தொடரும்.

# மிதுனராசி

(மிருகசீரிடம் 3,4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்)

உயர்வான சிந்தனைகள் மனதில் நிகழ்த்தச் செயல்படும் மிதுன ராசி அன்பர்களே! வருடாரம்பத்தில் அட்டமத்து குரு இருந்தாலும் 2009-05-01இல் குரு 9ம் வீட்டில் வந்து ஜென்மராசியை நோக்குவதால் நன்மையான பலனே தருவனவாக அமைகின்றது. □குரு பார்க்கின் கோடி புண்ணியமாம்□ என்னும் முதுமொழிக்கேற்ப நற்பலனை வாரி வழங்கும். எல்லாக் கருமங்களிலும் வெற்றி உங்களுக்கே முந்திய கஸ்டங்கள் நீங்கிப் புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். தேகசுகம், குடும்பசுகம் சிறப்பாக அமையும். பொருளாதாரம் முன்னேற்றம் ஏற்படும். தொழில் ஸ்தாபனங்கள் நன்றாக இயங்கி லாபத்தைத் தரும். தொழில் பதவி அந்தஸ்த்து உயரும். பாரட்டுகளும் பெறுவர். சம்பள உயர்வும் கிட்டும். வெளிநாட்டில் இருந்து பணவருவாய் கிடைக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் குதூகலம் காணும். மணவாழ்க்கை மனம்போல் கைகூடும். மகிழ்ச்சி ததும்பும். வியாபாரத் துறையினருக்கு முன்னேற்றம் லாபமும் உண்டு. வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்களுக்கு இருக்கும். பரிசும் பாராட்டும் கிட்டும். சனி பகவான் தொடர்ந்தும் 3ம் இடத்தில் நிற்பது நல்ல பலன் மேலும் அதிகரிக்கும். 2009-09-09இல் 4ம் இடத்தில் சனி பகவான் மாறுவதால் வீடு, வாகனம் என்பவற்றில் சிக்கல்கள் ஏற்படும். தேகசுகம் பாதிக்கப்படும்.

2009-07-30இல் குருபகவான் மீண்டும் அட்டமத்துக்கு வருவதால் 2009-05-01க்கு முன்பிருந்த கஸ்டநிலை மீண்டும் ஏற்படும். இது 2009-12-19வரை தொடரும். பின் 2009-05-01க்குப் பின் உள்ள பலன் தொடரும்.

□:நன்றி மறந்த கயவரையும், சான்றோர் மறந்து மன்னிப்பர்□

\- பாபா □

# கர்கடகராசி

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

நல்ல விஷயங்களில் நாட்டம் கொண்ட கர்கடகராசி அன்பர்களே! ஏழரைச்சனி பிற்பகுதியுடன் வருஷம் பிறக்கிறது. இவர்களுக்கு 2009-05-01 அட்டமத்து குரு ஆரம்பிக்கிறது. இவர்களுக்கு ஒரு சோதனை காலமாகவே இருக்கிறது. எதிலும் அவதானமாக நடக்க வேண்டும். குடும்பத்தில் சர்ச்சைகள் தோன்றும் பிள்ளைகள் சொந்தரவு தருவார்கள். பணவருவாய் குறையும். நினைத்த கருமங்கள் ஏமாற்றத்தில் முடியும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவு அதிகமாகும். வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் கஸ்டமடைவர். விவாகப்பேச்சுக்கள் காலதாமதத்தினையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள் அதிகமாகும். உயரதிகாரிகளின் வெறுப்பக்கும் ஆளாகவேண்டி வரும். பொறுமையைக் காப்பது நல்லது. வியாபாரிகளுக்கு வியாபாரம் நட்டத்திலே நடக்கும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். திருமணமாகாதோருக்கு கருமம் கைகூடாது. மகிழ்ச்சி குன்றும். மாணவர்களுக்கு ஈடுபாடு குறையும். கல்வியிலே ஊக்கம் தேவை. 2009-07-30 பின் சற்று தீமைகள் குறைந்து 2009-12-19க்குப் பின் மீண்டும் மேற்கூறிய பலன் ஆரம்பமாகும். 2009-09-09 இல் சனி பகவான் மாறுவதால் ஏழரைச்சனி நீங்குகிறது. அதன்மேல் சற்று ஆறுதல் ஏற்படும். சோதனைகள் குறைவடையும். பொருளாதாரம் ஓரளவு நன்றாக அமையும். தொழில், திருமணம், கல்வி தடைப்பட்டிருந்தால் சித்தியாகும்.

30 - 60 வயதுக்கிடைப்பட்டோர் பெரும் நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு காணப்படும். கல்வி சித்தியும் பாராட்டும் கிட்டும்.

# சிங்கராசி

(மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)

தளராத நம்பிக்கையுடன் உழைத்து தகுந்த பலன் பெறும் சிங்க ராசி அன்பர்களே! உங்களுக்கு வருடம் முழுவதும் ஏழரைச் சனி நடந்து கொண்டிருந்தாலும் குரு பகவான் 7இல் சஞ்சரிப்பதால் சற்று ஆறுதல் உண்டு. □குரு பார்க்கின் கோடி புண்ணியமாம்□ என்ற முதுமொழிக்கேற்ப கோடி நன்மைகள் கிட்டும். குடும்பசுகம், தேகசுகம் பாதிப்படையாது. எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். பொருளாதார நிலை நன்றாக அமையும். புத்திரர்களால் சுகம் கிடைக்கும். இனசனங்களிடையே ஒற்றுமையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு உயர்ச்சி ஏற்படாவிட்டாலும் பிரச்சினை இருக்காது. வேலைப்பளு குறைவாகவும் சக உதவிகள் கிட்டும். வியாபாரிகளுக்கு அதிக லாபம் இல்லாவிடினும் நட்டம் ஏற்படாது. புதிய முதலீடுகளை செய்வதை தவிர்த்தல் நல்லது. மாணவர்களுக்கு ஓரளவு நன்மை தரக்கூடியதாக அமையும். பலவழிகளிலும் முன்னேற்றம் ஏற்படும். ஆனால் ஊக்கம் தேவை. மணமாகாதோருக்கு திருமணம் இழுபறியில் இருக்கும் திருமணம் கைகூடாது. 2009-07-30இல் குருபகவான் மீண்டும் 6ல் சஞ்சரிப்பதால் 2009-05-01 க்கு முன்னர் இருந்த கஷ்ட நிலை ஏற்படும். குடும்பசுகம் பாதிக்கப்படும். தேகசுகம் பாதிக்கப்படும். வாயு, வாதம், கை கால் எலும்பு முறிவு அல்லது நூடம், நரம்புத் தளர்ச்சி ஏற்படலாம். நன்மையும் தீமையும் கலந்தே பலன் நடைபெறும்.

2009-09-09 இல் சனி 2இல் சஞ்சரிப்பதாலும் 2009-12-09இல் மீண்டும் குரு பகவான் சஞ்சரிப்பதால் 2009-07-30க்கு முன்னர் பலன் நடைபெறும்.

# கன்னிராசி

(உத்தரம் 2,3,4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)

சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை பக்குவப்படுத்திக் கொள்ளும் கன்னி ராசி அன்பர்களே! வருட ஆரம்பத்திலிருந்த ஏழரைச்சனி, 2009-09-09இல் நடுப்பகுதிக்கு வருகிறது. குருபகவானின் சுகமும் இல்லை. சனி பகவானும் குரு பகவானும் சேர்ந்து தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். குடும்பத்தில் கஸ்ட நிலையே கூடுதலாக இருக்கும். கருத்து வேற்றுமை தோன்றும். கருமங்கள் கைகூடாது. நண்பர்கள் கூட எதிர்ப்புக் காட்டுவார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியடையும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடையாது. தொடங்கும் கருமங்களில் தடை, தாமதம் காட்டும். இனபந்துக்களுடன் ஒற்றுமை குறைவு காட்டும். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிப்பதுடன் எதிர்ப்புக்கள் தோன்றும். உயர்ச்சி தள்ளிப் போகும். அதிகாரிகள் கடினமாக நடந்து கொள்வர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நட்டத்திலேயே விற்பனையாகும். தேகசுகம், குடும்பசுகம் பாதிக்கப்பட்டு வைத்தியச் செலவு அதிகமாகும். புதிய தொழில்களையோ அன்றி முதலீடுகளையோ ஆரம்பிக்காமல் இருப்பது நன்று. இக்காலங்களில் பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று. வாயு, வாதம், கை கால் எலும்பு முறிவு, நூடம், நரம்புத் தளர்ச்சி என்பன துன்பம் தரலாம். 2009-09-09வரை வைத்தியச் செலவு அதிகமாகும். பின் குறையும்.

2009-05-01 முதல் 2009-07-30 வரையும் 2009-12-19 முதல் தேகசுகம் பாதிக்கப்படும். பெரும்பாலும் மூச்சுத் திணறல், ஆஸ்த்மா, ஞாபக மறதி, தலையில் நோய், பெண்களாயின் கர்ப்பம் சம்பந்தப்பட்ட துன்பம் ஏற்படலாம்.

# துலாராசி

(சித்திரை 3,4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதங்கள்)

தர்மம் தலைகாக்கும் என்ற நம்பிக்கையுடன் அறச்செயல்களில் ஈடுபட்டுவரும் துலாராசி அன்பர்களே! 2009-05-01 இல் 5க்கு குரு வருவதால் நற்பலன்கள் கூடுதலாகவே இருக்கும். எடுத்த கருமங்கள் யாவும் எளிதில் அனுகூலமாகும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் வலுக்கும். உறவினர்களிடையே தொடர்பு நெருக்கமாகும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். தேகசுகம் நன்றாக இருக்கும். தொட்டதெல்லாம் பொன்னாகும். மணவாழ்க்கையை எதிர்நோக்குவோருக்கு சிறப்பான வாழ்க்கை அமையும். மகழ்ச்சி நிலவும். உத்தியோகத்தர்களுக்கு அந்தஸ்த்து உயரும். அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வேலைப்பளு குறைவடையும். வரவேற்பு பிரமாதமாக இருக்கும். பதவி உயர்வு தேடிவரும். சம்பள உயர்வு தேடிவரும். பலரதும் பாரட்டுக்கள் கிட்டும். வியாபாரிகளுக்கு தேங்கியிருந்த பொருட்கள் விற்பனையாகிப் பணம் சேரும். முதலீடுகள் லாபகரமாக விற்பனையாகும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர்வார்கள். புதிய முதலீடுகளுக்கும் நன்று. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம், பரீட்சையில் சித்தி, பரிசும், பாராட்டும் கிட்டும்.

2009-09-09இல் சனி பகவான் 12இல் வருவதால் ஏழரைச்சனி ஆரம்பமாகும். ஆனாலும் கஸ்ட பலன்களைக் கொடுக்க மாட்டார். பொருளாதாரம் சற்றுக் குறையும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் பின்பே கைகூடும். கொடுக்கல் வாங்கல்கள் அதிகம் பிரச்சினை தராது. ஆனால் தாமதமாகும். செலவுத் தானம் அதிகரிக்கும். 2009-12-19இல் குரு பகவான் மீணடும் 5ல் நிற்பதால் □குரு பார்க்கின் கோடி புண்ணியமாம்□ என்ற முதுமொழிக்கேற்ப கஸ்ட பலன்கள் நீங்கி நல்ல பலன் ஏற்பட இடமுண்டு.

# விருச்சிகராசி

(விசாகம் 4ம்பாதம், அனுஷம், கேட்டை)

எந்தச் சூழலிலும் கலங்காத உள்ளம் படைத்த விருச்சிகராசி அன்பர்களே! வருட ஆரம்பம் பொதுவாக நற்பலனுக்குரியதாவே அமைகிறது. மேலும் 2009-05-01இல் குரு பகவான் 4ல் சுபத்தானத்திற்கு வருகிறது. பொருளாதாரம் நன்றாக அமையும். குடும்பநிலை நன்றாக இருக்கும். தேகசுகம் குடும்பசுகம் சிறப்பாக அமையும் பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். கணவன் மனைவி அன்னியோன்யம் சிறக்கும் மங்கல கருமங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கும். முந்திய கஸ்டங்கள் நீங்கிப் புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். பிள்ளைகளால் கௌரவம் கிட்டும். வெளிநாட்டிலிருந்து உதிவிகள் கிடைக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் குதூகலம் காணும். உத்தியோகத்தர்களுக்கு உதவிகள் கிடைக்கும். வேலைப்பளு குறைவடையும். மேலதிகாரிகள், சகஊழியர்கள் உதவிகள் கிட்டும். பதவி உயர்வு கிட்டும். பலராலும் மதிக்கப்படுவார்கள். வியாபாரத்தில் விற்பனை நன்றாக இருக்கும். பழைய நிலுவைகள் நிவர்த்தி செய்யப்படும். பெண்களுக்கு திருமணப் பேச்சுக்கள் நற்பலனளிக்கும். மகிழ்ச்சி ததும்பும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பரீட்சையில் சித்தியும் பாராட்டுக்களும் கிடைக்கும்.

2009-09-09இல் 11க்கு சனிபகவான் மாறுவதால் நற்பலன்கள் மேலும் அதிகமாகும். தொழிலில் ஏற்பட்ட மந்த நிலை நீங்கும். வேலைப்பளு குறையும். மேலதிகாரிகள் சக ஊழியர்கள் உதவி கிட்டும். பதவியுயர்வு கிட்டும். வரவு தாமதமாகும். லாபம் குறையும், பொருளாதாரம், குடும்பசுகம், கல்வி, வேலைவாய்ப்பு, திருமண பந்தம் என்பன நன்றாக அமையும்.

□:ஆயிரம் நூல்கள் பயிலுவதைவிட ஒரு உயர்ந்த நூலின்படி
ஒழுகல் மேலானது□

- பாபா -

# தனுராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)

தானும் நன்மை செய்து மற்றவர்களையும்நன்மை செய்ய வைக்கும் நற்குணம் படைத்த தனுராசி அன்பர்களே! 2009-12-19இல் குரு 3ம் வீட்டிற்கு செல்கிறார். நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். தொடங்கும் கருமங்கள் வெகுசிரமத்தின் மேல் கைகூடும். பொருளாதாரம் வரவு செலவு சமமாக இருக்கும். பிரயாணங்களுக்கு கெடுபிடிகள் அதிகரிக்கும். தேகசுகம் சமாளிக்கக் கூடியதாக அமையும். எக்கருமத்திலும் அவதானம் தேவை. குடும்பசுகம், பாதிக்கப்படக்கூடும். முன்னேற்றங்கள் மட்டாகவே இருக்கும். தொழில் துறையினருக்கு பிரயாசைக்கேற்ப லாபம் பெறுவர். மேலதிகாரிகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாமல் நடந்து கொள்வது நன்று. சக ஊழிர்கள் உதவிகள் குறையும். போக்குவரத்தும் கஸ்டமாக அமையும். வியாபாரத்தில் நிகரலாபம் கிடையாது. வியாபாரத்தில் தேக்க நிலை காணப்படும். வங்கி நிலையை அவதானித்துக் கொள்ளுதல் நன்று. கடன் வியாபாரங்களைத் தவிர்க்கவும். விவாகத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். திசா புத்திகள் நன்றாக இருப்பின் கருமம் கைகூடும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். கல்வியில் கூடிய கவனம் தேவை.

2009-09-09இல் சனிபகவான் 10ம் வீட்டிற்கு வருவதால் நற்பலன்கள் குறைவடையும். பொருளாதாரம் குறைவடையும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. அவ்வப்போது பணிகள் சீராக நடந்தாலும் பதவி உயர்வுகள் தள்ளிப்போகும். வேலைப்பளு அதிகமாகும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். புதிய முதலீடுகள் இழுபறி நிலையில் காணப்படும் வங்கி உதவிகள் மந்தமாகவே இருக்கும். வியாபாரத்தில் நிகர லாபம் கிடையாது.

# மகரராசி

(உத்தராடம் 2,3,4ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதங்கள்)

கருணை நிறைந்த மனத்துடன் பிறருக்கு உதவும் மகர ராசி அன்பர்களே! 2009-05-01இல் ஜென்ன குரு விலகினாலும், அட்டமத்துச் சனி தொடர்கிறது. வாழ்க்கை பெரிய சுமையாக இருக்கும். நண்பர்கள் கூட உதவ மாட்டார்கள். விபத்துக்கள், செலவினங்கள், பகைமை, எதிர்ப்பு போன்ற பல கஸ்டங்களை ஏற்படுத்தும். ஆனாலும் படிப்படியாக குறைந்து கொண்டே வரும். பொருளாதாரம் ஓரளவு நன்றாக அமையும். கருத்து வேற்றுமைகள் தோன்றும். கருமங்கள் கைகூடாது. திருமணமாகாதோருக்கு திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிப்பதுடன் எதிர்ப்புகள் தோன்றும். உயர்ச்சிகள் தள்ளிப் போகும். அதிகாரிகள் கடினமாக நடந்து கொள்வர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நட்டத்திலேயே விற்பனையாகும். புதிய தொழில்களையோ அன்றி முதலீடுகளையோ ஆரம்பிக்காமல் இருப்பது நன்று. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். கூடிய ஊக்கம் எடுப்பது நல்லது. சனி வீடாக இருப்பதால் மேற்கூறிய கஸ்ட பலன் குறைய வாய்ப்புண்டு.

2009-09-09 அட்டமத்துச் சனி விலகுவதால் பலன்கள் நன்மைக்குத் திரும்பும். முன்பிருந்த கஸ்டபலன் விலகி நற்பலன் கிட்டும். எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். வீட்டில் குதூகலம் காணும் தொழில் ஸ்தாபனங்களில் இருந்த சிரமங்கள் விலகும். திருமணம் கைகூடும். வியாபாரம் முன்னேற்றம் காணும். முன்பிருந்த கஸ்டங்கள் விலகும். மாணவர்களுக்கு கல்வி நன்றாக இருக்கும். புகழும் பாராட்டும் கிட்டும். 2009-07-30 முதல் 2009-12-19 வரையுள்ள காலப்பகுதியிலும் கூடிய நன்மை ஏற்படும்.

# கும்பராசி

(அவிட்டம் 3,4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதங்கள்)

வாழ்வில் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தன்னடக்கத்துடன் செயற்படும் கும்பராசி அன்பர்களே! 2009-05-01இல் ஜென்ம குரு ஆரம்பிக்கிறது. இதுவும் முன்போலவே பலன் கொடுக்கும். எல்லாக் கருமங்களும் சிக்கலையே கொடுக்கும். தேகசுகம் பாதிக்கப்பட இடமுண்டு. வைத்தியச் செலவு அதிகமாகும். பொருளாதார நிலை வீழ்ச்சியடையும். சிலருக்கு வதிவிட மாற்றங்கள் ஏற்படலாம். நிம்மதியின்மையும் இருந்து கொண்டே இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. குடும்ப சச்சரவுகள் காட்டும். பிள்ளைகள் சொந்தரவு தருவார்கள். பணவருவாய் குறையும். நினைத்த கருமங்கள் ஏமாற்றத்திலே முடியும். விவாகப் பேச்சுக்கள் காலதாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக தொழிலாளர் ஒத்துழைப்பு குறையும். வியாபாரம் மந்த நிலை காட்டும். வியாபாரத்திலே புது யுக்திகளை கையாளவேண்டியிருக்கும். மாணவர்களுக்கு கல்வி மந்தமாகக் காணப்படும். கல்வியில் தடைகள் ஏற்படலாம். ஊக்கம் தேவை. திசாபுத்திக்காலம் நன்றா இல்லாவிட்டால் குருவின் தாக்கம் கூடுதலாக இருக்கும்.

2009-09-09இல் அட்டமத்துச் சனி ஆரம்பமாவதால் மேலும் கஷ்ட பலன் அதிகமாகும். குடும்பசுகம் பாதிக்கப்படும். வாயு, வாதம், கை கால் எலும்பு முறிவு, நூடம், நரம்புத் தளர்ச்சி என்பன ஏற்படலாம். இக்கால கட்டத்தில் பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு எதிர்ப்புகள் தோன்றும், உயர்ச்சி தள்ளிப்போகும். அதிகாரிகள் கடினமாக நடந்து கொள்வர். மங்கல கருமங்கள் பின் தள்ளிப்போகும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறையும். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

# மீனராசி

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

துணிச்சலான செயல்களை நம்பிக்கையுடன் செய்து வெற்றிபெறும் மீனராசி அன்பர்களே! 2009-05-01இல் குருபகவான் செலவுத் தானமான 12இல் நிற்பதால் குருவின் சுகம் குன்றும். நற்பலன்கள் யாவும் குறையும். பொதுவாக குடும்பநிலை சிறப்படைவது கடினம். இடையிடையே சச்சரவுகள் தோன்றும். பொருளாதாரத்தை மேம்படுத்த கடின உழைப்பு தேவை. தொடங்கும் கருமங்களில் தடை, தாமதம் காட்டும். இனபந்துக்களுடன் ஒற்றுமைக் குறைவு காணும். வாகனம் செலுத்துவோர் விபத்துக்கள் பற்றி அவதானமாக நடந்து கொள்ளவும் கொடுக்கல் வாங்கல்கள் நிம்மதியைக் குறைக்கும். வாங்கிய கடனைத் திரும்பிச் செலுத்துவது கடினம். மருத்துவச் செலவு, வேறு செலவு அதிகமாகும். உத்தியோகத்திலுள்ளோருக்கு வேலைப்பளு அதிகமாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் குறைவும், பதவி உயர்வு தள்ளிப் போகும். மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகவேண்டி வரும். மங்கல கருமங்கள் கைகூடுவது கடினம். திருமணப் பேச்சுக்கள் தற்சமயம் கைகூடாது. வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். புதிய முதலீடுகள் சாத்தியமில்லை. செலவுகள் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வி மந்தமாகக் காணப்படும். கல்வியிலே நாட்டம் குறையும். கல்வியிலே ஊக்கம் தேவை. 2009-09-09இல் சனிபகவான் 7க்கு வருவதால் மேலும் கஷ்டத்தைத் தரும் செலவுகள் அதிகமாகும். வாயு, வாதம், கை கால் எலும்பு முறிவு, நூடம், நரம்புத் தளர்ச்சி என்பன துன்பம் தரலாம். 2009-07-30 முதல் 2009-12-19 வரை ஓரளவு கஷ்டம் குறைந்து நற்பலன் நடைபெறும்.

திருக்கணிதப்படி ∴ வாக்கியப்படி

| | ஆதாயம் | விரயம் | |
|---|---|---|---|
| மேடம் - விருச்சிகம் | 2 | 8 | நட்டம் |
| இடபம் - துலாம் | 11 | 14 | நட்டம் |
| மிதுனம் - கன்னி | 14 | 11 | சுகம் |
| கர்கடகம் | 14 | 2 | அதிகலாபம் |
| சிங்கம் | 11 | 5 | லாபம் |
| தனுசு - மீனம் | 5 | 14 | பெருநட்டம் |
| மகரம் - கும்பம் | 8 | 8 | சமசுகம் |
| | 65 | 62 | |

இதுவரை காலமும் பிறந்த சாதகம், பிறந்த தினத்தில் குடும்பப் பலன், பூப்படைந்த சாதகம், பூப்படைந்த பலன் நிவர்த்தி, பெயர்க்குறிப்பு, பெயர், கிரகதோஷம், கிரகசாந்தி, திருமணப் பொருத்தம், சுபநாள் என்பன சம்பந்தமாக ஆலோசனை பெற்ற உங்களுக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நன்றி

"ஜெய் சாயிராம்"

**Type Setting by : T.Kirinivasan. B.Sc., PGDE, ICDL. (Teacher)**